**செய்தி வெளியீடு: 565** **நாள்: 01.12.2016**

## மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதற்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

## உலக எய்ட்ஸ் தின விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் உரை

உலக எய்ட்ஸ் தினம் தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கத்தின் சார்பாக இன்று (01.12.2016) கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

மாண்புமிகு அமைச்சர் பேசுகையில் : -

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்கு பார்வை மற்றும் சீரிய தலைமையின் கீழ், தமிழ்நாடு, புரட்சிகரமான பல மருத்துவ திட்டங்களை வெகு சிறப்பாக செயல்படுத்தி முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. நேற்றைய தினம் புதுடில்லியில் நடைபெற்ற 7வது இந்திய உடல் உறுப்பு தான நிகழ்வில், உடல் உறுப்பு தான திட்டத்தில் சிறந்த செயல்பாட்டிற்காக தமிழ்நாடு தேர்ந்தெடுக்கப்பட்டு அதற்கான விருதினை தமிழ்நாடு அரசிற்கும் இந்திய அரசு வழங்கி கௌரவித்தது. இந்த விருது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக வழங்கப்படுவது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபை 1988-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் முதல் நாள் உலக எய்ட்ஸ் தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் உலக எய்ட்ஸ் தின கருத்து, **சிறந்த தலைமை பண்பு, அர்ப்பணிப்பு மற்றும் தாக்கம்** (Leadership, Commitment, Impact) என்பதே ஆகும்.

தாயிடம் இருந்து சேய்க்கு எச்.ஐ.வி தொற்று பரவுவதை தடுப்பதில் உலக அளவில் கியூபா முதலிடம் வகிக்கிறது, இரண்டாம் இடம் தாய்லாந்து. இதை தொடர்ந்து இந்தியாவில், தமிழ்நாட்டில் உள்ள 32 மாவட்டங்களில் தற்போது 16 மாவட்டங்களில் தாயிடம் இருந்து சேய்க்கு எச்.ஐ.வி தொற்று பரவுவதை முற்றிலுமாக தடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு சிறந்த சாதனையாகும். மீதமுள்ள மாவட்டங்களிலும் இந்நிலையை அடைய அரசு தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளது. எச்.ஐ.வி தொற்றால் பாதிக்கப்பட்டவர் புறக்கணிக்கப்படக் கூடாது என்பதற்காக தமிழ்நாடு அரசு ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நாம் அனைவரும் தன்னார்வ ரத்தப் பரிசோதனை செய்திட வேண்டும் என்றும், எச்.ஐ.வி மற்றும் எய்ட்ஸ் தொற்றுள்ளோரை பரிவுடன் அரவணைத்து, சம உரிமை அளித்து அவர்களது தன்னம்பிக்கை வளர உதவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

இவ்விழாவில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் மரு ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்க திட்ட இயக்குநர் திரு. சி.நடராசன் இ.ஆ.ப., பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் மரு. கே. குழந்தைசாமி, மருத்துவக் கல்வி இயக்குநர் மரு. ரா. நாராயணபாபு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் மரு. கே. செங்குட்டுவன் உள்ளிட்ட ஏராளமான உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**